24.02.2025

RLTOP.No.7/2023

ம.சா.1.திரு.கதிரேசன் த.பெ.கணபதி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

எனக்கு இந்த வழக்கு விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். நான் B.A பட்டதாரி. மெடிக்கல் கடை வைத்து 5 வருடமாக நடத்தி வருகிறேன். எனது தகப்பனார் பெயர் கணபதி என்ற கருப்பன் செட்டியார். எதிர்மனுதாரரின் தகப்பனார் வீரன்செட்டியார் என்றால் சரிதான். எனது தகப்பனாரும் எதிர்மனுதாரரின் தகப்பனாரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது உடன்பிறந்தவர்கள் நான்கு நபர்கள் என்றால் சரிதான். எனது சகோரதர் பெயர் புகழேந்தி என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் உடன்பிறந்தவர்களும் 5 நபர்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்து சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. எனது தகப்பனார் இறந்தபின்பு எங்களுக்கும் எதிர்மனுதாரர் குடும்பத்திற்கும் பாத்தியப்பட்ட பொது சொத்தை பொறுத்து 5, 6 வருடங்களுக்கு முன்பு இருந்தே பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். இந்த சொத்தை பொறுத்து அல்ல வேறு சொத்தை பொறுத்து பிரச்சனை இருந்து வருகிறது. நான் மனு சொத்தை 1995 ல் கிரையம் வாங்கினேன். அப்போதே எதிர்மனுதாரர் மனு சொத்தில் கடை வைத்திருந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நான் கிரையம் பெற்ற பின்பு என்னிடம் வந்துபேசி 2011, 2012 ஆண்டு வாக்கில் கடை வைத்தார்.

2. மனுசொத்தை நான் கிரையம் வாங்கும்போதே எதிர்மனுதாரர் அதில் பலசரக்கு கடை வைத்திருந்தார் என்றாலும் அதை மறைத்து இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மனு சொத்தில் எதிர்மனுதாரர் 2011, 2012 ஆண்டுவாக்கில் தான் கடை வைத்தார் என்பதற்கு ஆதாரம் உள்ளது என்றால் இல்லை. எதிர்மனுதாரர் மனு சொத்தில் வாடகைதாரராக இருந்து வருவதாக சொல்லுவதற்கு வாடகை ரசீதும் நான் கொடுத்துள்ளேனா என்றால் வாடகை ரசீது எதுவும் இல்லை. வாய்மொழியாக பேசி கொண்டோம். எனது மெடிக்கல் கடையில் வருமான வரி, வணிக வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். 2019, 2020 காலகட்டமுதலே எதிர்மனுதாரர் முறையாக வாபடகை செலுத்தவில்லை என்று கூறுவதால் அது குறித்து சட்ட நடவடிக்கை நான் எடுத்துள்ளேனா என்றால் எதிர்மனுதாரர் அவகாசம் கேட்டு கொண்டே இருந்ததாலும், முறைபடி வாடகை பதிவு

செய்து கொள்ளலாம் என்று நான் கேட்டபோது அதற்கும் காலம் கடத்தி வந்ததால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு காலதாமதம் ஆகிவிட்டது.

3. 02.08.2023 தேதியில் நான் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ 2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு எதிர்மனுதாரர் கொடுத்துள்ள பதில் அறிவிப்பு ம.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ 4 கண்டுள்ள காரணங்கள் உண்மையான காரணங்கள் என்றால் சரியல்ல.

**(**குறுக்கு விசாரணை தொடச்சிக்காக வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது**)**